**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 534/2019 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சகாய டைட்டஸ் (எ) டைட்டஸ் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. சிங்காராயன் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 09.09.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் A2 ஆஜர். A1 ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கடல் தொழில செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியும். 03.03.2013ம் தேதி இரவு சுமார் 10.00–10.30 மணியளவில் நானும் எனது மச்சான் தேவதாஸ் என்பவரும் கேரளாவில் இருந்து திங்கள்சந்தைக்கு வந்து கல்லுக்கூட்டத்தில் எனது உறவினருக்கு சுகம் இல்லாமல் இருந்ததால் அவரை பார்க்க வேண்டி திங்கள் சந்தையில் இருந்து பேருந்தில் ஏறி கல்லுக்கூட்டம் பேருந்து நிறுத்தத்திற்கு சென்று அங்கு இறங்கும் பொழுது முதலில் நான் பேருந்தில் இருந்து கீழே இறங்கி விட்டேன்.

2. ஆனால் எனது மச்சான் தேவதாஸ் பேருந்தில் இருந்து இறங்குவதற்கு முன்பே பேருந்தை ஓட்டுநர் எடுத்து விட்டார். அதனால் எனது மச்சான் தேவதாஸ் நிலைதடுமாறி பேருந்தின் படிகட்டின் கீழே விழுந்து அவரது விலாவிலும் கால் முட்டியிலும் அடிபட்டது. உடனே நான் ஜேம்ஸ் மருத்துவமனைக்கு எனது மச்சானை அழைத்துச் சென்றேன்.

3. அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு ஆம்புலன்ஸ் மூலம் அவரை நாகர்கோவிலில் உள்ள ஜெயசேகரன் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு அவருக்கு சிகிச்சை அளித்துக் கொண்டிருந்த பொழுது அவர் சிறிது நேரம் கழித்து சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். இது சம்மந்தமாக குளச்சல்

காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். மேற்படி புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை எப்பொழுது விசாரணை செய்தார்கள் என்றால், நான் புகார் கொடுத்து ஒரு மாதம் கழித்து விசாரணை செய்தார்கள். நான் கேரளாவில் எங்கு தொழில் செய்து வருகிறேன் என்றால், முனம்பம் என்ற இடத்தில் வேலை செய்து வருகிறேன். நான் கேரளாவில் இருந்து எப்பொழுது கிளம்பினேன் என்றால், 03.03.2013ம் தேதி காலை 11.00 மணியளவில் கேரளாவில் இருந்து கிளம்பினேன்.

2. திருவனந்தபுரத்தில் இருந்து திங்கள்சந்தை எவ்வளவு கி.மீ. தூரம் இருக்கும் என்றால், 60 கி.மீ. தூரம் இருக்கும். போலிசார் விசாரணையின் பொழுது நான் முனம்பத்தில் இருந்து குளச்சல் வரை வந்த பேருந்து பயணச்சீட்டுகளை கொடுத்தேன் என்றால், இல்லை. சம்பவதினமன்று நான் பயணம் செய்யவில்லை என்றாலும், அதனால் தான் பயணசீட்டு போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல.

3. எனக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளதா என்றால், இல்லை. நான் திங்கள் சந்தையில் இருந்து பயணம் செய்த பேருந்தின் எண் என்ன என்றால், அந்த பேருந்து திருநெல்வேலியில் இருந்து வந்தது. பேருந்தின் பதிவெண் எனக்குத் தெரியாது. திருநெல்வேலியில் இருந்து அச்சமயத்தில் குளச்சலுக்கு வருவதில்லை என்றால், சரியல்ல.

4. தேவதாஸ் என்பவருக்கு மது பழக்கம் உள்ளது என்றால், இல்லை. தேவதாஸ் என்பவர் குளச்சலில் இருந்து திங்கள்சந்தைக்கு மது அருந்துவதற்காக வந்தார் என்றால் இல்லை. நானும் தேவதாஸ்—ம் மது அருந்திவிட்டு குளச்சலுக்கு செல்ல வேண்டி திங்கள் சந்தையில் பேருந்து ஏறினோம் என்றால், சரியல்ல.

5. நாங்கள் குடிபோதையில் இருந்ததால் குளச்சலில் இறங்க வேண்டி கல்லுக்கூட்டத்தில் தவறுதலாக இறங்கினோம் என்றால், சரியல்ல. நாங்கள் இருவரும் குடிபோதையில் இருந்ததால் பேருந்தில் இருந்து தவறுதலாக இறங்கி விட்டோம் என்றால், சரியல்ல. அரசு பேருந்தின் நடத்துனரும் ஓட்டுநரும் வாகனத்தை மெதுவாக தான் இயக்கி வந்தார்கள் என்றால், நான் முதலில் இறங்கி விட்டேன். ஆனால் தேவதாஸ் இறங்குவதற்கு முன்னால் நடத்துனர் விசில் அடிக்கவே ஓட்டுநர் தேவதாஸ்

இறங்குவதை பார்க்காமல் பேருந்தை எடுத்து விட்டார். அதனால் தேவதாஸ் கீழே விழுந்துவிட்டார்.

6. நான் கல்லுக்கூட்டத்தில் எந்த உறவினரை பார்க்க இறங்கினேன் என்றால், அனிட்டா என்பவரை பார்க்க இறங்கினோம். போலிசார் விசாரணையில் நான் அனிட்டாவை பார்க்க கல்லுக்கூட்டத்தில் இறங்கினோம் என்று கூறினேன் என்றால், இல்லை. அனிட்டா என்ற ஒரு நபரே இல்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், இல்லை.

7. அரசு பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் மீது எந்த தவறும் இல்லை என்றாலும், நாங்கள் தவறுதலாக இறங்கி விட்டோம் என்றாலும், சரியல்ல. தேவதாஸ் என்பவருக்கு ஏற்பட்ட விபத்து சம்மந்தமாக விபத்துக் காப்பீடு தொகை கோரி வழக்கு நடந்து வருகிறது என்றால், சரிதான். நாங்கள் விபத்துக் காப்பீடு பெற வேண்டி போலிசார்களை சாதகமாக பயன்படுத்தி இவ்வழக்கை குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது தாக்கல் செய்தோம் என்றால், சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.